View metadata, citation and similar papers at core.ac.uk

brought to you by CORE

provided by International Research Journal of Tamil

RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt20

# தமிழக நாட்டுப்புறக்கதைகளும் கிரிம் சகோதரர்களின் நாட்டுப்புறக் கதைகளும் - ஓர் ஒப்பாய்வு

## இரா. மணிக்கண்ணன் [அ,*]

[அ] தமிழ்த்துறை, தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி, விழுப்புரம், தமிழ்நாடு, இந்தியா.

# Folktales of Tamil Nadu and the Grimm brothers' folktales - A comparison

## R. Manikannan [a, *]

[a] Department of Tamil, Theivanaiammal College for Women, Viluppuram 605602, Tamil Nadu, India.

Corresponding Author:
kannan.sarvaganan@gmail.com

Received : 10-01-2020
Accepted : 30-08-2020

**ABSTRACT**

Efforts to assess tamil culture on a global scale have been made through classical literature. More new information and results will be revealed when we evaluate the original oral works on the global platform than the classical classics that have the elements of verbal literature. Although tamil comparative studies have been carried out in a wide range of different types and versatile languages, the fields of comparative research in ancient languages like Tamil are emerging. The stories in the Tamil nadu folk lore published by Dr. Ramanathan and the folklore of The German and Ireland published by the Grim brothers have been comparatively studied.

**Keywords:** Grimm Brothers, Folklore, Comparative Studies, Arnie Thompson

## ஆசிரியர் குறிப்பு



இரா. மணிக்கண்ணன், நான் புதுவைப்பல்கலைக்கழகத்தில் 2017-ம் ஆண்டு முனைவர் உதவிப்பேராசிரியர் பா. இரவிக்குமார் அவர்களின் நெறியாளுகையின் கீழ் "தமிழ் நவீன நாடகப்பனுவல்களில் மகாபாரத மீள்புனைவுகள்" என்னும் தலைப்பில் முனைவர் பட்ட ஆய்வை முடித்திருக்கிறேன். தற்போது விழுப்புரம் தெய்வானையம்மாள் மகளிர் கல்லூரியின் தமிழாய்வுத்துறையில் உதவிப்பேராசிரியராகப் பணிபுரிந்து வருகிறேன்.

## முன்னுரை

மானுட சமூகத்தின் பொதுப்பண்பை இலக்கியத்தின் மூலம் அறிந்துகொள்ள முற்பட்ட நவீனத்துவக் காலமாயினும், மானுட சமூகத்தின் தனித்த அடையாளங்களை இலக்கியங்களின் மூலம் காணத்துடிக்கிற பின்நவீனத்துவக் காலமாயினும் ஒப்பிலக்கிய

ஆய்வின் தேவை எப்போதும் இருந்து கொண்டே இருக்கிறது என்பதே ஒப்பிலக்கிய ஆய்வின் சிறப்பாகும். தமிழ் ஒப்பிலக்கிய ஆய்வுகள் பல வகைப்பட்டதாய், பல்துறை சார்ந்ததாய் விரிந்த தன்மையில் மேற்கொள்ளப்பட்டிருந்தாலும் தமிழ் போன்ற தொன்மையான மொழியில் ஒப்பிலக்கிய ஆய்விற்கான களங்கள் புதிது புதிதாய் உருவாகிக்கொண்டே இருக்கின்றன. அதே நேரத்தில், தமிழ் போன்ற கீழைத்தேய மொழியின் இலக்கியங்களைத்தமிழ் மொழிக்கு பெரிதும் தொடர்பில்லாத ஐரோப்பிய மொழியின் இலக்கியங்களோடு ஒப்பிடுவது, சரியான ஆய்வு முறையாகுமா, இத்தகைய ஆய்வுகளால் பயன் விளையுமா? என்ற ஐயமும் ஏற்படுகிறது.இருப்பினும்,'மனிதனும் வாழ்வும் ஒன்று . எனவே இலக்கியமும் ஒன்றே என்று கருதும் வெல்லக் போன்ற அமெரிக்க ஆய்வாளர்கள், வரலாற்று ரீதியாக தொடர்பில்லாத இலக்கியங்களை ஒப்பிடுவதின் மூலம் இலக்கியங்களின் புதிய பரிமாணங்களைக் காண முடியும்; ஒன்றை வைத்தே மற்றொன்றைத் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியும் (Kasiviswanathan Cellappan, 1995: 4) என்ற ஒப்பிலக்கிய கொள்கையின் துணையோடு, முனைவர் ஆறு. இராமநாதன் பதிப்பித்த தமிழக நாட்டுப்புறக் கதைக்களஞ்சியத்திலுள்ள கதைகளும் கிரிம் சகோதரர்கள் பதிப்பித்த ஜெர்மன் மற்றும் அயர்லாந்து ஆகிய ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த நாட்டுப்புறக்கதைகளும் இங்கு ஒப்பியல் ஆய்விற்கு உட்படுத்தப்படுகின்றன.

## ஆய்வின் நோக்கம்

தமிழகப் பண்பாட்டை உலகளாவியத் தளத்தில் வைத்து மதிப்பீடு செய்வதற்குரிய முயற்சிகள் இலக்கியம் சார்ந்த நிலையில் செவ்விலக்கியங்களின் மூலமாகவே பெரும்பான்மையாக நடைபெற்றிருக்கின்றன. வாய்மொழி இலக்கியத்தின் கூறுகளைத் தன்னகத்தெ கொண்டிருக்கிற செவ்விலக்கியங்களைக் காட்டிலும் அசலான வாய்மொழிப் படைப்புகளை உலகளாவியத் தளத்தில் வைத்து மதிப்பிடும் போது மேலும் பல புதுப்புது தகவல்களும், முடிவுகளும் வெளிப்படும். உலக அளவில் நாட்டுப்புறக்கதைகளின் கதை அடைவுகளை மையமிட்ட ஆர்னி - தாம்சனின் ஆய்வுகளிலும் கூட தமிழ் நாட்டுப்புறக் கதைகளுக்கான வகிபாகம் தரப்படவில்லை என்பது கவனிக்கப்பட வேண்டியதாகும். இந்நிலையில் உலகளாவிய வாய்மொழிக் கதைகளோடு தமிழக வாய்மொழிக் கதைகளை ஒப்பீடு செய்வதின் மூலம், உலக வாய்மொழிக் கதைகளுக்கும் தமிழக நாட்டுப்புறக் கதைகளுக்கும் இருக்கின்ற பொதுத்தன்மையான உறவையும் தமிழக நாட்டுப்புறக்கதைகளுக்கு மட்டுமே இருக்கிற தனித்தன்மையான உறவையும் அடையாளம் காண முடியும் என்பதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

## முன் ஆய்வுகள்

தமிழ் நாட்டுப்புறக் கதைகள் பல்வேறு அணுகுமுறைகளில் ஆராயப்பட்டுள்ளன. உளவியல் பார்வை, அமைப்பியல் ஆய்வு, எதிர்வு அமைப்புமுறை, உடல்மொழி, பெண்ணிய நோக்கு, வரலாற்று நிலவியல் முறை ஆகிய கோணங்களில் ஆராயப்பட்டுள்ளன (2003: 43)

நாட்டுப்புறக் கதைகள் தொடர்புடைய ஒப்பீட்டு ஆய்வுகள் அதிக அளவில் தமிழகச் சூழலில் நிகழாத நிலையில் பின்வரும் ஆய்வுகளைக் குறிப்பிடத்தக்க ஆய்வுகளாகக் கருதலாம்.

- பி. எல். சாமி அவர்கள் தமிழக வாய்மொழி இலக்கியங்களில் புத்த ஜாதகக் கதைகள் மற்றும் பஞ்ச தந்திரக் கதைகளின் செல்வாக்கு குறித்து ஆராய்ந்துள்ளார்.
- முனைவர் ஆறு. இராமநாதன் அவர்களுடைய வரலாற்று நிலவியல் ஆய்வு தமிழக அளவிலான கதைகளுக்குள் நிகழ்த்தப்பட்டதாகும். இந்த ஆய்வில் நீட்டூரி கதையின் மாற்று வடிவங்கள் ஒப்பிடப்பட்டுள்ளன.
- தமிழக நாட்டுப்புறக் கதைக்களஞ்சியத்தின் நான்காவது ஐந்தாவது தொகுதியைப் பதிப்பித்த முனைவர் சி. மா. இரவிச்சந்திரன் அவர்கள், கதைகளின் பின் குறிப்புகளில் ஆர்னி - தாம்ப்சன் கதை அடைவில் குறிப்பிடப்பட்டுள்ள உலக நாட்டுப்புறக் கதைகளின் கதைக்கருக்களைத் தமிழகக்கதையோடு ஒப்பிட்டு எழுதியிருக்கிறார்.
- இதே கதைக்களஞ்சியத்தின் பதினான்காவது தொகுதியில் முனைவர் ஆ. சிவசுப்பிரமணியன் அவர்களும் ஆர்னி - தாம்ப்சன் கதை அடைவில் குறிப்பிடப்பட்டுள்ள உலக நாட்டுப்புறக் கதைகளின் கதைக்கருக்களைத் தமிழகக்கதையோடு ஒப்பிட்டு எழுதியிருக்கிறார்.
- சரஸ்வதி வேணுகோபால் அவர்கள் நாட்டுப்புறவியல் கோட்பாட்டு ஆய்வுகள் எனும் நூலில் கிரிம் சகோதரர்களின் தொகுப்பிலுள்ள 'little louse and little flea' என்கிற கதையை' இது என்னடா கொடுமை!' என்னும்தமிழக நாட்டுப்புறக் கதையோடு ஒப்பிட்டு ஆராய்ந்திருக்கிறார் (Jacob Grimm, Wilhelm Grimm, 2014; Kasiviswanathan Cellappan,1995; Pichai, 2003).

## ஆய்வின் மையம்

தமிழக நாட்டுப்புறக்கதைகளுக்கும் ஜெர்மன் மற்றும் அயர்லாந்து ஆகிய ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த கிரிம் சகோதரர்கள் தொகுத்த நாட்டுப்புறக்கதைகளுக்குமான ஒப்பீட்டு ஆய்வு,கதைகளுக்கிடையே காணப்படுகிற ஒற்றுமைகள் மற்றும் வேறுபாடுகள் என இரண்டு நிலைகளில் மேற்கொள்ளப்படுகின்றன.

தமிழக நாட்டுப்புறக்கதைகளிலும் ஜெர்மன் மற்றும் அயர்லாந்து ஆகிய ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த நாட்டுப்புறக்கதைகளிலும் பல கதைகள் பெரிதும் ஒத்த தன்மையில் காணப்படுகின்றன. ஒத்த தன்மை கொண்ட கதைகள் மட்டுமே இங்கு ஆய்வுக்கு உட்படுத்தப்படுகின்றன.

### 1. ஆட்டுக்கத( தொகுதி- 1, பதி. முனைவர் ஆறு. இராமநாதன், கதை. எண் - 85) - The Little Magic Table, The Golden Donkey And The Club In The Sack ( கதை. எண் - 36)

### ஒற்றுமைகள்

ஒரு தந்தைக்கு மூன்று மகன்கள் இருந்தனர். அந்தக் குடும்பத்தில் ஒரு ஆடும் இருந்தது. ஆட்டை மேய்ப்பதற்குத் தந்தை முதல் மகனை அனுப்பி வைக்கிறார், ஆடு நன்றாக மேய்ந்து விட்டு, தந்தை கேட்கும் போது உணவு போதவில்லை எனப் பொய்

சொல்கிறது. கோபம் கொண்ட தந்தை மகனை வீட்டைவிட்டு விரட்டிவிடுகிறார். இப்படியே மூன்று மகன்களுக்கும் நடக்கிறது. வீட்டை விட்டுச் சென்ற முதல் மகன் ஒருவரிடம் வெகு நாட்கள் பணிபுரிந்து வீடு திரும்பும் போது மாயத்தன்மை கொண்ட பரிசுப்பொருள் ஒன்றினைப் பெற்று வருகிறான். வழியில் ஒரு விடுதியில் தங்கும் போது விடுதியின் உரிமையாளன் அந்த மாயப் பொருள் போல் போலி ஒன்றை உருவாக்கி அதனை அவனிடம் கொடுத்து ஏமாற்றி விடுகிறான். இரண்டாம் மகனுக்கும் இது போலவே நடக்கிறது. இதனைத் தொடர்ந்து மூன்றாம் மகனும் மாயத்தன்மை கொண்ட பரிசுப் பொருள் ஒன்றினைப் பெற்று அதே விடுதியில் தங்குகிறான். இவன் தனது மாயத்தன்மை கொண்ட பொருளின் மூலமாக விடுதி உரிமையாளனைத் தாக்கி தனது அண்ணன்களின் மாயத்தன்மை கொண்ட பொருட்களையும் மீட்கிறான். பின்னர் இந்தப் பொருட்கள் மூலம் தந்தையும் மகன்களும் மகிழ்ச்சியாக வாழ்கிறார்கள் (Ramanathan, 2004).

மேற்கண்ட கதை நிகழ்வுகள் இரண்டு கதைத் தொகுதிகளிலும் ஒற்றுமையுடன் இருக்கிறது.

## வேறுபாடுகள்

| வ.எண் | ஆட்டுக்கத | The Little Magic Table, the Golden Donkey and the Club in the Sack |
|---|---|---|
| 1 | மூன்று மகன்களின் தந்தை ஒரு இராஜா | மூன்று மகன்களின் தந்தை காலணி செய்பவர் |
| 2 | முதல் மகன் பெறும் பரிசுப் பொருட்கள் ஸ்டூல், நாற்காலி, பெஞ்சு. இந்தப் பொருட்கள் மூலம் உணவு கிடைக்கும் | முதல் மகன் பெறும் பரிசுப் பொருட்கள் சிறிய மேஜை, மேஜை விரிப்பு, வெள்ளித் தட்டு, வெள்ளி கத்தி, வெள்ளிக் கரண்டி இந்தப் பொருட்கள் மூலம் உணவு கிடைக்கும் |
| 3 | முதல் மகன் ஆசாரியிடம் வேலை செய்கிறான்<br>இரண்டாம் மகன் வண்ணானிடம் வேலை செய்கிறான்<br>மூன்றாம் மகன் மந்திரவாதியிடம் வேலை செய்கிறான் | முதல் மகன் ஆசாரியிடம் வேலை செய்கிறான்<br>இரண்டாம் மகன் அரவைக்கூட முதலாளியிடம் வேலை செய்கிறான்<br>மூன்றாம் மகன் மந்திரவாதியிடம் வேலை செய்கிறான் |

## 2. கொசவனுக்கு வந்த ராசயோகம்( தொகுதி- 2, பதி. முனைவர் அ. கருணாநிதி, கதை. எண் - 23) - A Story About A Brave Tailor (கதை. எண் -20)

## ஒற்றுமைகள்

சாதாரண குடிமகன் ஒருவன் தற்செயலாகத் தனது வேலை நேரத்தில் எதிர்பாராமல் சில ஈக்களை அடித்துக் கொன்று விடுகிறான். இந்தச் செயலை வீரம் மிகுந்த செயலாக

நினைத்து பெருமை கொள்கிறான். மேலும், அனைவரிடமும் தனது வீரச் செயல் குறித்துக் கூறி தனது புகழ் நாடெங்கும் பரவ வேண்டும் என ஆசைப்படுகிறான். நாட்டின் அரசனுக்கும் ஒரு நாள் இந்த குடியானவனின் வீரச்செயல் தெரிய வருகிறது. அரசன் குடியானவனின் வீரத்தைச் சோதிக்கும் விதமாக சில சோதனைகளுக்கு அவனை உள்ளாக்குகிறான். குடியானவன் இந்த சோதனைகளில் சிக்காமல் அனைத்தையும் எளிதில் முறியடிக்கிறான். இறுதியில் ஒரு நாட்டிற்கு அரசனாகவும் மாறுகிறான்.

மேற்கண்ட கதை நிகழ்வுகள் இரண்டு கதைத் தொகுதிகளிலும் ஒற்றுமையுடன் இருக்கிறது.

## வேறுபாடுகள்

| வ.எண் | கொசவனுக்கு வந்த ராசயோகம் | A Story About A Brave Tailor |
|---|---|---|
| 1 | குடியானவன் பானை செய்யும் கொசவனாகக் குறிப்பிடப்படுகிறான். | குடியானவன் துணி தைக்கும் தையற்காரனாகக் குறிப்பிடப்படுகிறான். |
| 2 | குடியானவன் திருமணமானவன் | குடியானவன் திருமணமாகாத இளைஞன் |
| 3 | புலியை அடக்குதல், எதிரி நாட்டு அரசர்களின் படையெடுப்பை முறியடித்தல் ஆகிய சாகசச் செயல்களைச் செய்கிறான் | இரண்டு அரக்கர்களை அழித்தல், யூனிகார்ன் எனும் குதிரையை அடக்குதல், காட்டுப்பன்றியை அடக்குதல் ஆகிய சாகசங்களைச் செய்கிறான் |
| 4 | எதிர் பாராமல் குருட்டு அதிர்ஷ்டமாகவே அனைத்து விரச் செயல்களும் நடைபெறுகின்றன. | மதிநுட்பம் மூலமாகவும் திட்டமிட்ட தொலை நோக்குப்பார்வையின் மூலமாகவும் வீரச் செயல்கள் நடைபெறுகின்றன. |
| 5 | அரசனிடம் வீரச் செயலின் காரணமாக நாட்டை ஆளும் வாய்ப்பைப் பெறுகிறான் | வீரச் செயலின் மூலம் மன்னனின் மகளைச் திருமணம் செய்துகொண்டு நாட்டிற்கு இளவரசனாக மாறுகிறான் |
| 6 | அரசனுக்கு வீரனின் பழைய தொழில் தெரிவதில்லை | அரசனுக்கு வீரனின் பழைய தொழில் தெரியவருகிறது. |

## 3. மனைவியை விற்ற கோமாளி (தொகுதி-3, பதி. முனைவர் அ. ம. சத்தியமூர்த்தி, கதை. எண்- 9) - Clever Hans (கதை. எண் - 32)

## ஒற்றுமைகள்

ஒரு ஆடவன் தனது விருப்பத்திற்குரிய பெண்ணைப் பார்ப்பதற்காகத் தனது தாயின் தூண்டுதலின் பேரில் அவளது வீட்டிற்குச் செல்கிறான். அங்கு முட்டாள் தனமான செயலைச் செய்கிறான். பின்பு, தாயின் அறிவுரையின் பேரில் மீண்டும் அந்தப் பெண்ணைப் பார்க்கச் செல்கிறான். இந்த முறை சூழலைக் கருத்தில் கொள்ளாமல் வறட்டுத்தனமாகத் தாயின் அறிவுரையினை மட்டும் கடைப்பிடித்து மீண்டும் தவறான செய்கையில் ஈடுபடுகிறான்.

இதனால் உறவினர்களால் தாக்கப்படுகிறான். பிறகு, தாயிடம் நடந்தவற்றைக் கூறுகிறான் தாய் மீண்டும் அறிவுரை கூறுகிறாள். இப்போதும் முன்பு போலவே சூழலைப் புரிந்து கொள்ளாமல் தவறு செய்கிறான். இவ்வாறே ஒவ்வொரு முறையும் சூழலைப் புரிந்து கொள்ளாமல் தாயின் அறிவுரையை வறட்டுத் தனமாகப் பின்பற்றும் முட்டாள் இளைஞன் இறுதியில் தனது முட்டாள் தனத்தினால் தனக்கு உரிமையான பெண்ணையும் இழக்கிறான். மேற்கண்ட கதை நிகழ்வுகள் இரண்டு கதைத் தொகுதிகளிலும் ஒற்றுமையுடன் இருக்கிறது.

## வேற்றுமைகள்

| வ.எண் | மனைவியை விற்ற கோமாளி | Clever Hans |
|---|---|---|
| 1 | ஆடவன் மனைவியைப் பார்க்கச் செல்கிறான் | ஆடவன் காதலியைப் பார்க்கச் செல்கிறான் |
| 2 | மனைவியின் உறவினர்கள் தாக்குகிறார்கள் | யாரும் தாக்கவில்லை |
| 3 | வீட்டை எறித்தல், கட்டிய புது வீட்டைச் சிதைத்தல், மரண வீட்டில் சிரித்தல், திருமண வீட்டில் அழுதல் மற்றும் மனைவியை விற்றல் ஆகிய முட்டாள் தனமான செயல்களை ஆடவன் செய்கிறான் | ஊசியைக் குதிரை வண்டியில் குத்தி வைத்தல், கத்தியை ஆடையைக் கிழித்துக் குத்தி வைத்தல், ஆட்டுக்குட்டியைக் கட்டி சட்டைப் பையில் வைத்தல்,நாய் உண்ணத்தக்க வகையில்பன்றி இறைச்சியைக் கயிற்றில் கட்டி தெருவில் இழுத்து வருதல், கன்றுக்குட்டியைத் தோளில் தூக்கி வருதல் மற்றும்திருமணம் செய்து கொள்ள வேண்டிய பெண்ணை கயிற்றில் கட்டி தொழுவத்தில் இட்டு புல் தருதல் ஆகிய முட்டாள்தனமான செயல்களை ஆடவன் செய்கிறான் |
| 4 | மனைவியை விற்று விடுகிறான் | திருமணம் செய்து கொள்ள வேண்டிய பெண், இவனின் முட்டாள் தனமான செயல்களால் திருமணம் வேண்டாம் எனக்கூறிவிலகிச்சென்று விடுகிறாள். |

### 4. பஞ்சுக்கதை (தொகுதி-5, பதி. முனைவர் சி. மா. இரவிச்சந்திரன், கதை. எண் - 18) - Mother Holle (கதை. எண் - 24)

## ஒற்றுமைகள்

தாயின் கொடுமைக்கு உள்ளாகும் ஒரு பெண் ஒவ்வொரு நாளும் பெரும் துன்பத்திற்கு உட்படுகிறாள். தாய் ஒரு மகளை மட்டும் சிறப்பாகவும் மற்றொரு பெண்ணை இழிவாகவும் நடத்துகிறாள். ஆனாலும், தொடர்ந்து தனக்குக் கொடுக்கப்படும் பணிகளைச் சிறப்பாகச் செய்கிறாள் இப்பெண். ஒரு நாள் தாய் கொடுக்கும் வழக்கமான கடினம் நிறைந்த

ஒரு பணியைச் செய்யும் போது சில நபர்களைச் சந்திக்கிறாள் அவர்கள் கொடுக்கும் கடினமான பணிகளையும் இன்முகத்துடன் செய்கிறாள். இதனால் மகிழ்ச்சி அடையும் அந்நபர்கள் அவளுக்குச் சிறப்பான பரிசுப் பொருட்களைத் தந்து வழி அனுப்பி வைக்கின்றனர். இந்தப் பரிசுப்பொருட்களைப் பார்த்துப் பொறாமை கொண்ட அவளின் தாய் மற்றொரு மகளையும் அந்த நபர்களைச் சந்திக்க அனுப்புகிறாள். ஆனால் அவளின் மகள் அந்நபர்கள் தருகிற பணிகளைச் செய்யாமல் தட்டிக்கழிக்கிறாள் எனவே அந்நபர்கள் அவளுக்குச் சிறப்பான பரிசுப் பொருட்களுக்குப் பதில் இழிவான துன்பம் கொடுக்கும் பொருட்களைப் பரிசாகத் தருகின்றனர்.

மேற்கண்ட கதை நிகழ்வுகள் இரண்டு கதைத் தொகுதிகளிலும் ஒற்றுமையுடன் இருக்கிறது.

## வேற்றுமைகள்

| வ.எண் | **பஞ்சுக்கதை** | **Mother Holle** |
|---|---|---|
| 1 | பஞ்சினை சேகரித்து வரும் போது பரிசுப்பொருட்கள் தரும் நபர்களைச் சந்திக்கிறாள் | நீரினைச் சேகரித்து வரும் போது பரிசுப்பொருட்கள் தரும் நபர்களைச் சந்திக்கிறாள் |
| 2 | கடினமான வேலை செய்யும் பெண் முள், ரோஜாச் செடி, எமதர்மன் ஆகிய நபர்களைச் சந்திக்கிறாள். | கடினமான வேலை செய்யும் பெண் ரொட்டி சுடும் அடுப்பு , ஆப்பிள் மரம், மதர் ஹோலி ஆகிய நபர்களைச் சந்திக்கிறாள் |
| 3 | கதையின் முடிவில் மாற்றாந்தாய் தனது ஒரு தலை பட்சமான குணத்தை மறந்து இரண்டு மகள்களையும் சமமுடன் நடத்துகிறாள் | இது போன்ற செய்தி இல்லை |
| 4 | மாற்றாந்தாயின் கொடுமைகள் பற்றிப் பேசுகிறது | ஒரே தாய்க்கு இருக்கும் இரண்டு மகள்களிடையே காட்டப்படும் பாரபட்சம் பற்றிக் கதை பேசுகிறது. |

### 5. மொள கதெ (தொகுதி-3, பதி. முனைவர் அ. ம. சத்தியமூர்த்தி, கதை. எண் -58)- Riffraff (கதை. எண் - 10)

## ஒற்றுமைகள்

ஒரு குழுவினர் முக்கியமான காரணத்தை முன்னிட்டு பயணம் செய்கின்றனர். அப்பயணத்தின் போது வழிப்பயணத்தில் வேறு சில பொருட்களும் உயிரினங்களும் இணைந்து கொள்கின்றன. வழியில், ஒரு இடத்தில் உயிரினங்களும் பொருட்களும் தங்குகின்றன. அப்போது ஒவ்வொன்றும் ஒரு இடத்தில் ஓய்வெடுக்கின்றன. பொழுது

விடியும் போது அங்கு வரும் மனிதன் அந்தப் பொருட்களின் மூலம் எதிர்பாராமல் தாக்கப்படுகிறான்.

மேற்கண்ட கதை நிகழ்வுகள் இரண்டு கதைத் தொகுதிகளிலும் ஒற்றுமையுடன் இருக்கிறது.

## வேற்றுமைகள்

| வ.எண் | மொள கதெ | Riffraff |
|---|---|---|
| 1 | மொள திருட்டுப்போன தனது பசு மாட்டை நோக்கிப் புறப்படுகிறான் | சேவலும் கோழியும் தனது இரை இருக்கும் இடத்தை நோக்கிப் புறப்படுகிறான் |
| 2 | மொள வழியில் கழுதை, தேள், சேவல், முட்டுக்கல் மற்றும் எல்லக்கல்லு ஆகியவற்றைச் சந்தித்து பயணத்தில் இணைத்துக்கொள்கிறது. | சேவலும் கோழியும் வழியில் வாத்து, ஊசி, ஊக்கு ஊசி ஆகியவற்றைச் சந்தித்து பயணத்தில் இணைத்துக்கொள்கிறது. |
| 3 | பசு மாட்டைத் திருடியவனின் வீட்டில் கழுதை, தேள், சேவல், முட்டுக்கல்ஆகியவை எதிர்பாராமல் அவனைத் தாக்குகின்றன. தேள் திருடனின் மனைவியின் மீத விழுந்து கடிக்கிறது, தடிக்குச்சியில் சுற்றியிருந்த பாம்பு திருடனைக் கடிக்கிறது,கழுதை கதவைத்தறக்கும் எதிர் வீட்டுக்காரனை உதைக்கிறது, மேலும், அவன் எல்லைக்கல்லில் தடுக்கி விழுகிறான் | விடுதியில் சேவலும் கோழியும் தங்கி இருக்கும் போது விடுதி உரிமையாளன் நாற்காலியில் இருக்கும் ஊசியின் மூலமும் பிறகு துண்டில் இருக்கும் ஊக்கு ஊசியின் மூலமும் தாக்கப்படுகிறான், முடிவில் வாத்தின் முட்டை அவனது முகத்தில் பட்டுக் காயமடைகிறான். |

6. **தர்மம் நிலைக்குமா** (தொகுதி-5, பதி. முனைவர் சி. மா. இரவிச்சந்திரன், கதை. எண் -34) **the devil with the three hairs (** கதை. எண் - 29).

## ஒற்றுமைகள்

ஆடவன் ஒருவன் தனது வாழ்க்கைக்கு முக்கியமான ஒன்றினைத் தேடிப் பயணிக்கிறான். இந்தப் பயணத்தின் போது வழியில் சந்திக்கும் சில நபர்களும் அவர்களின் வாழ்க்கைக் குறித்த வினாக்களுக்கு விடை தெரிந்து கொண்டு வரும்படி அவனிடம் கோரிக்கை வைக்கின்றனர். அவனது தேடலுக்கு விடை கிடைத்த இடத்தில், தான் சந்தித்த மனிதர்களின் வினாக்களுக்கும் விடை கிடைக்கிறது. தான் தெரிந்து கொண்ட விடைகளை

உரியவர்களிடம் சொல்லி அவர்களின் பிரச்சனையைத் தீர்த்து வைக்கும் போது அவனுக்குச் சிறப்பான பரிசுப்பொருட்களும் செல்வங்களும் கிடைக்கின்றன.

மேற்கண்ட கதை நிகழ்வுகள் இரண்டு கதைத் தொகுதிகளிலும் ஒற்றுமையுடன் இருக்கிறது.

## வேற்றுமைகள்

| வ.எண் | தர்மம் நிலைக்குமா | the devil with the three hairs |
|---|---|---|
| 1 | ஆடவன் தர்மம் நிலைக்குமா அதர்மம் நிலைக்குமா எனத் தெரிந்து கொள்ள ஈஸ்வரனை நோக்கி பயணம் செய்கிறான் | ஆடவன் பேய் ஒன்றிடம் மூன்று முடிகளைப் பெற பயணம் செய்கிறான் |
| 2 | இடிந்து கொண்டேயிருக்கும் குளம், காய் காய்க்காத மாமரம், துன்பப்படும் முடவன், சாவினை எதிர் நோக்கியிருக்கும் நாகம் ஆகியோர்களை ஆடவன் சந்திக்கிறான். | தீராத நோய் கொண்ட இளவரசி, நீர் சுரக்காத கிணறு, காய் காய்க்காத அத்தி மரம், ஒய்வில்லாது பணி செய்யும் படகோட்டி ஆகியோர்களை ஆடவன் சந்திக்கிறான் |
| 3 | பாதிக்கப்பட்டவர்களின் பிரச்சனையைத் தீர்த்த ஆடவனுக்கு அவர்கள் பரிசுப்பொருட்களைக் கொடுத்தனர் அதன் மூலம் அவன் தர்மம் செய்யத் தொடங்கினான் | பாதிக்கப்பட்டவர்களின் பிரச்சனையைத் தீர்த்த ஆடவனுக்கு அவர்கள் ஓர் அரசனுக்குத் தேவையான படை, செல்வம், அரண்மனை ஆகியவற்றைக் கொடுத்தனர் அதன் மூலம் அவன் தான் விரும்பிய பெண்ணை அவளின் தந்தை சம்மதத்தோடு திருமணம் செய்து கொண்டான். |

## 7. மொண்டி கதை (தொகுதி-4, பதி. முனைவர் சி. மா. இரவிச்சந்திரன், கதை. எண் -16) - the tailor who soon became rich ( கதை. எண் -61)

கதையின் நாயகன் பொருள் இல்லாத ஏழையாக இருக்கிறான். புத்தி சாதுர்யத்தினாலும் அதிர்ஷ்டத்தாலும் தீடுரென்று அவனுக்குச் செல்வம் கிடைக்கிறது. அவனுக்குச் செல்வம் கிடைத்த காரணத்தை மற்றவர்கள் கேட்கப் போலியான ஒரு காரணத்தைச் சொல்லி அவர்களைத் துன்பத்தில் சிக்க வைக்கிறான். இதனால் கோபம் அடைந்த அவர்கள் அவனைக் கொலை செய்ய முயற்சி செய்கின்றனர். ஆனால் அவன் இந்தக் கொலை முயற்சியிலிருந்து ஒவ்வொரு முறையும் தப்பித்து மீண்டும் மீண்டும் தனது புத்தி சாதுர்யத்த்தினால் அதிக செல்வத்தைப் பெறுகிறான். இறுதியில் தன்னை கொலை செய்ய முயல்பவர்களையும் அழித்து விடுகிறான்.

மேற்கண்ட கதை நிகழ்வுகள் இரண்டு கதைத் தொகுதிகளிலும் ஒற்றுமையுடன் இருக்கிறது.

## வேற்றுமைகள்

| வ.எண் | மொண்டி கதை | the tailor who soon became rich |
|---|---|---|
| 1 | கதையின் நாயகன் மொண்டி (உடல் ஊனமுற்றவன்) | கதையின் நாயகன் தையல்காரன் |
| 2 | கதையின் நாயகனைக் கொல்ல முயல்பவர்கள் அவனது சகோதரர்கள் | கதையின் நாயகனைக் கொல்ல முயல்பவர்கள் ஊர் மக்கள் |
| 3 | தன்னை ஏமாற்றிய சகோதரர்களின் இறப்பிற்குப் பின்பு மொண்டி அவர்களது மனைவிகளைப் பழிக்குப்பழி வாங்குகிறான். | ஊர் மக்கள் அனைவரும் இறந்த பின்பு தையல்காரன் அனைவரின் சொத்துக்களையும் எடுத்துக்கொண்டு மகிழ்ச்சியாக வாழ்கிறான். |

தமிழ் நாட்டுப்புறக்கதைகளிலும் கிரிம் சகோதரர்களின் நாட்டுப்புறக்கதைகளிலும் விளாடிமர் பிராப் குறிப்பிடுகிற நாட்டுப்புறக் கதைகளுக்குரிய பொது அமைப்பும், ஆர்னி தாம்சனின் கதை அடைவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள கதைகளின் அடைவுகளும் காணப்பட்டாலும் மேற்கண்ட இந்த ஏழுக்கதைகளுக்கிடையே காணப்படுகிற ஒத்தத்தன்மை முக்கியமானதாகும்.

ஐரோப்பிய நாட்டினரும் தமிழரும் மொழியால், பண்பாட்டால், நிலவியலால் வேறுபட்டு இருந்தாலும் இவர்களிடையே வழங்கிவருகிற பல வாய்மொழிக் கதைகள் ஒத்த தன்மையில்இருப்பது ஆய்விற்குரிய ஒன்றாகும். பின்வரும் சில கருத்துக்களின் வழி இந்த ஒத்த தன்மைக்கான காரணத்தை ஆராயலாம். அதாவது,

I. பழங்காலத்தில் கிரேக்க, ரோமானிய நாடுகளோடு பழந்தமிழருக்கு வணிகத் தொடர்பு இருந்திருக்கிறது.
II. காலனிய காலத்தில் வணிகத்தின் காரணமாகவும் ஐரோப்பிய ஏகாதிபத்தியத்தின் காரணமாகவும் ஐரோப்பிய நாடுகளுக்கும் தமிழகத்திற்கும் தொடர்பு ஏற்பட்டிருக்கிறது.

மேற்கண்ட இந்தக் காரணங்களின் வழி தமிழக நாட்டுப்புறக் கதைகளுக்கும் ஐரோப்பிய நாட்டுப்புற கதைகளுக்குமிடையே காணப்படும் ஒற்றுமைகளுக்குக் காரணம் வணிகர்கள் என அனுமானிக்க முடிகிறது.

“கதைகள் மற்ற நாட்டுப்புற இலக்கிய வகைகளைக்காட்டிலும் இடப்பெயர்ச்சி செய்து பரவும் இயல்பைக் கொண்டவை. வணிகச் செட்டியார்கள் இத்தகைய பணியைச் செய்துள்ளார்கள் (2003: 41).” -- என்று முனைவர் அ. பிச்சை கூறும் கருத்தும்,

“மனிதர்கள் தேசம் விட்டு தேசம் பயணம் செய்தபோது கதைகளும் கூடவே சென்றிருக்கின்றன. ஈசாப் கதையில் சொல்லப்பட்ட முயல், ஆமைப் போட்டிக் கதை கிரேக்கத்தில் இருந்து பயணித்து நம் ஊரை வந்து அடைந்துள்ளது. இது போலவே குரங்கின் இதயத்தைத் தின்ன ஆசைப்பட்ட முதலையின் கதை இந்தியாவில் இருந்து கிரேக்கத்துக்குப்

போயிருக்கிறது"(2015: 16) - என்று எழுத்தாளர் எஸ். ராமகிருஷ்ணன் கூறும் கருத்தும் இதனை உறுதிப் படுத்துகிறது. மேலும்,

காலனியக் காலத்தில் ஐரோப்பியர்களின் மதப்பரப்பல் காரணமாகத் தமிழ் நாட்டிற்கு வருகை புரிந்து, தமிழில் நூல்கள் இயற்றிய ஐரோப்பியப்பாதிரிமார்களின் முயற்சிகளும் கூட மேற்கண்ட செயல்பாடுகளுக்குக் காரணமாக இருக்கலாம் என்றும் கருத முடிகிறது.தமிழ்ச் சமூகத்தில் நிலவி வருகிற தர்மம் பற்றிய சமூக கருத்தாடல், மறுபிறவி, மாற்றாந்தாய் கொடுமை, சகோதரப்பூசல், ஊனமுற்றோர் பற்றிய ஏளன மதிப்பீடுகள் ஆகிய பண்பாட்டு மதிப்பீடுகளுக்கு ஏற்பவே ஒத்த தன்மையுள்ள இக்கதைகளில் சிற்சில வேறுபாடுகள் காணப்படுகிறது என்பதையும் புரிந்து கொள்ள முடிகிறது.

## முடிவுரை

உலகெங்கிலும் தமிழர் பரவிய தடங்களைக் கல்வெட்டு, நாணயம், செப்பேடுகள், தொல்பொருட்கள் ஆகிய வரலாற்றுச் சான்றுகளின் மூலம் ஆய்வாளர்கள் கண்டு உணர்த்தி வருகின்றனர். அண்மைக்காலங்களில் ஊர்ப்பெயர் ஆய்வுகள் மூலமும் இந்தப்பணி அடுத்தக் கட்டத்திற்கு முன்னேறியுள்ளது. இந்நிலையில் வாய்மொழி இலக்கியத்தின் மூலமாக ஒப்பீட்டு நிலையில் மேற்கொள்ளப்படுகிற இத்தகைய ஆய்வுகளும் கூட தமிழரின் தடங்களைக் காணத்துடுக்கும் வழிவகைப்பட்டதே என்பதை அனைவரும் உணர்ந்து இந்த ஆய்வினை அடுத்த நிலைக்கு கொண்டு செல்வது காலத்தின் தேவையாகும். எனவே, ஒத்த தன்மையுடன் காணப்படும் இந்தக் கதைகளில் எந்தக் கதைகள் சுயமானவை என்னும் பொருண்மையில் தொடர்ச்சியாக மேலாய்வுகள் மேற்கொள்ளப்படும் போது தமிழின் தடத்தின் மீது புதிய வெளிச்சங்கள் பாய்ச்சப்படும் என்பதை உறுதியாக நம்பலாம்.

## References

Jacob Grimm, Wilhelm Grimm. (2014) The original folk & fairy tales of the brothers Grimm, Translated by Jack zips, Princeton university press, Ney jersey.

Kasiviswanathan Cellappan., (1995), Analogy : Policies and processes, International Institute of Tamil Studies, Chennai, India.

Pichai, A., (2003), History of Tamil Folklore Studies, International Institute of Tamil Studies, Chennai, India.

Ramanathan, R., (2004), Folk Stories Repository (15 Chapters), Meyyapan pathipagam, India.

**Funding:** NIL

**Acknowledgement:** NIL

**Conflict of Interest:** NIL

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The author 2020. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License